**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி : 14.05.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

அமைதியும் பாதுகாப்புமே, **உலக** ஒழுங்கிற்கு அடிப்படை என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர், குறைந்த காலத்திலேயே நாட்டு மக்களிடம் முழு **நம்பிக்கை** பெற்றுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா பாராட்டியுள்ளார்.

நாட்டின் **தேசிய** இலக்குகளை எட்டுவதில் சுகாதாரத் துறையினர் ஒவ்வொருவருக்கும் முக்கியப் பங்கு இருப்பதாக, மத்திய சுகாதாரத் துறைச் செயலர் வலியுறுத்தியுள்ளார்.

**தென்மேற்குப் பருவ மழை**, வரும் 16ஆம் தேதி வாக்கில் தொடங்க கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*பிரிக்ஸ் மாநாடு – 1 (19)*

அமைதியும் பாதுகாப்புமே, உலக ஒழுங்கிற்கு அடிப்படை என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். புதுடெல்லியில் இரண்டு நாள் பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். உலக அளவில்

தற்போது நிலவும் பிணக்குகள், பேச்சுவார்த்தை மற்றும் தூதரக முயற்சிகளின் முக்கியத்துவத்தையே வலியுறுத்தி வருவதாக அவர் தெரிவித்தார். சமத்துவ அடிப்படையில் உலக அளவில் நீடித்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் அதே வேளை, பொறுப்புக்களை அந்தந்த நாடுகளின் சக்திக்கு ஏற்ப பகிர்ந்து கொள்ளுதல் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். தொழில்நுட்பங்களின் வளர்ச்சியால் உலகின் தோற்றமே மாறிவரும் நிலையில், புதிய தொழில்நுட்பங்களை நல்லாட்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கும் பயன்படுத்திக் கொள்ள முடியம் என்று அவர் கூறினார். தீவிரவாதத்திற்கு எதிராக, உலக நாடுகளிடையே ஒத்துழைப்பு வலுப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். சர்வதேச பிணக்குகள், நிச்சயமற்ற பொருளாதாரச் சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வர்த்தக சவால்களை சமாளிப்பதில் பிரிக்ஸ் நாடுகள், ஆக்கப்பூர்வ பங்காற்றும் என்ற நம்பிக்கை உலக அளவில் மேம்பட்டு வருவதையும், வெளியுறவு அமைச்சர் தமது உரையில் சுட்டிக்காட்டினார்.

*பிரிக்ஸ் மாநாடு – 2 (08)*

பிரேசில் வெளியுறவு அமைச்சர் திரு. **மாரோ வீயிரா**, ரஷ்ய வெளியுறவு அமைச்சர் திரு. **செர்கி லாவ் ரோவ்**, ஈரானிய வெளியுறவு அமைச்சர் திரு. **சையது அபாஸ் அராக்ச்சி**, மலேசிய வெளியுறவு அமைச்சர் **டத்தோ** சிரி முகமது பின் **ஹாஜி ஹசன்**, தென்னாப்பிரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. **ரொனால்ட் லமோலா** உள்ளிட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். பிரதமர் திரு. **நரேந்திர மோடியையும்**, இன்று இவர்கள் சந்திக்கின்றனர்.

*அமித்ஷா – 1 (08)*

**தேசிய பேரிடர் மீட்புப் படையினர்**, இருபது ஆண்டுகள் என்னும் குறைந்த காலத்திலேயே 140 கோடி இந்தியர்களிடம் முழு நம்பிக்கை பெற்றுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

தேசிய பேரிடர் மீட்பு படைக்கு, குடியரசு தலைவரின் வர்ண விருது வழங்க, காசியாபாத்தில் இன்று நடைபெற்ற விழாவில் அவர் பேசுகையில், பேரிடர் சம்பவங்கள் எங்கு நிகழ்ந்தாலும், NDRF வந்து சேர்ந்தால் தான் மக்கள் நிம்மதி பெருமூச்சு விடுவதாக கூறினார். உள்துறை அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள் …

**(வாய்ஸ்)**

*அமித்ஷா – 2 (12)*

**(வாய்ஸ்)**

2 லட்சத்து 20 ஆயிரம் தன்னார்வ தொண்டர்கள், 10 ஆயிரம் குடிமைப் பாதுகாப்பு படையினர் மற்றும் 10 ஆயிரத்து 500 கடலோடிகளுக்கும், தேசிய பேரிடர் மீட்பு படையினர் பயிற்சி அளித்திருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்தார். பேரிடர்களைத் தாங்கும் வகையிலான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் துறையில், இந்தியா, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில், உலகிற்கே வழிகாட்டி வருவதாக உள்துறை அமைச்சர் கூறினார். இதற்கென இந்தியா உருவாக்கிய CDRI சர்வதேச கூட்டணியில் இதுவரை, 48 நாடுகள் இணைந்து இருப்பதாக அவர் தெரிவித்தார். பேரிடர் மேலாண்மை துறையில் இந்தியா தற்போது உலகின் தலைமை நாடாக மேம்பட்டு இருப்பதில் சந்தேகம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

*ஆபரேஷன் சிந்தூர் (12)*

நவீன இந்தியாவில், சைபர் தாக்குதல், விண்வெளித் தாக்குதல் போன்ற புதிய அபாயங்களில் இருந்து தேசிய நலன்களைப் பாதுகாக்க, அறிவியல் சிறப்பும், ராணுவ பலமும் சேர்ந்து பயன்படுத்தப் படுவதாக பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு.சஞ்சய் சேத் கூறியுள்ளார். ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் சிறப்பான வெற்றியே இதற்குச் சான்றாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பாதுகாப்புத்

துறைக்கு புதுமைப் படைப்புகளை உருவாக்குவது குறித்து, **கலாம் அண்ட் கவச்** என்ற தலைப்பில் புதுடெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள **3ஆவது பேச்சுவார்த்தை** மாநாட்டை இன்று அவர் தொடக்கி வைத்துப் பேசினார். நவீன யுகத்தில், பாரம்பரிய ராணுவ பலத்திற்கு அப்பாற்பட்டு, தொழில்நுட்பம் மற்றும் சுயசார்பு மூலமாகவே, நிஜமான பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

*எண்ணெய் நிலவரம் 1 (14)*

நாட்டில், கச்சா எண்ணெய், எல்பிஜி மற்றும் இயற்கை எரிவாயு போதிய அளவில் கிடைப்படை உறுதிப்படுத்த திறம்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. மேற்காசியாவின் அண்மை நிலவரங்கள் குறித்து, சம்பந்தப்பட்ட பல்வேறு அமைச்சகங்கள் இணைந்து இன்று புதுடெல்லியில் நடத்திய செய்தியாளர் கூட்டத்தில், மத்திய பெட்ரோலியத் துறை இணைச் செயலர் திருமதி சுஜாதா ஷர்மா இதை தெரிவித்தார். நாடு முழுவதும் எந்த ஒரு எல்பிஜி ஏஜன்சியிலும், கையிருப்பு காலியாகவில்லை என்றும், அனைத்து எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களும் முழுத் திறனுடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த 3 நாட்களில், சுமார் 1 கோடியே 40 லட்சம் எல்பிஜி சிலிண்டர்களுக்கு புக்கிங் தரப்பட்ட நிலையில், 1 கோடியே 39 லட்சம் சிலிண்டர்கள் விநியோகம் செய்யப்பட்டு விட்டதாக அவர் கூறினார். இம்மாதம் 1ஆம் தேதி முதல் இதுவரை சுமார் 83 ஆயிரத்து 500 டன் வர்த்தக எல்.பி.ஜி., விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுமார் 90 ஆயிரம் டன் எல்பிஜி ஏற்றிய 2 கப்பல்கள், நேற்று இரவு ஹோர்மூஸ் ஜலசந்தியை கடந்து இருப்பதாகவும், வரும் 16ஆம் தேதி இக்கப்பல்கள் இந்தியா வந்து சேரும் என எதிர்பார்க்கப் படுவதாகவும், துறை செயலர் திரு. முகேஷ் மங்கல் கூறினார். இந்தியாவின் MSV ஹாஜி

*எண்ணெய் நிலவரம் 2 (04)*

அலி வர்த்தக கப்பல், ஓமன் கடற்பகுதியில் நேற்று அதிகாலை தீப்பிடித்து மூழ்கிய போதிலும், அதிலிருந்த 14 இந்திய மாலுமிகள், ஓமன் கடலோர பாதுகாப்பு படையினரால் பத்திரமாக மீட்கப்பட்டு, கரை சேர்ந்து இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

*பட்டமளிப்பு -1 (07)*

புதுச்சேரியில், **ஜிப்மர் செவிலியர் பயிற்சிக் கல்லூரியில்** இன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திருமதி **புண்யா சலீலா ஸ்ரீவாஸ்தவா** தலைமை விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார். நாட்டின் தேசிய இலக்குகளை எட்டுவதில் சுகாதாரத் துறையினர் ஒவ்வொருவருக்கும் முக்கியப் பங்கு இருப்பதாக, அவர் தமது உரையில் கூறினார். இது குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

*பட்டமளிப்பு -2(08)*

**(வாய்ஸ்)**

முன்னேறிய இந்தியாவை உருவாக்க, **ஆரோக்கியமான இந்தியா தான்** அடிப்படை என்று மத்திய சுகாதாரத் துறை செயலர் திருமதி. புண்ய சலீலா ஸ்ரீவாஸ்தவா கூறினார். 2017ஆம் ஆண்டு தேசிய கொள்கையில், நோய் வருமுன் காக்கும் அணுகு முறைக்கும், சிகிச்சை, வலி நிவாரணம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். நாட்டில் பொது சுகாதாரத்தை மேம்படுத்த, இக்கொள்கைக்கு ஏற்ப அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் அவர் எடுத்துக் கூறினார்.

நாட்டில் 64ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது சுகாதார அமைப்புகள், தேசிய அளவிலான தர உறுதிப்பாட்டுச் சான்றிதழ் பெற்றுள்ளதாக திருமதி ஸ்ரீவாஸ்தவா தெரிவித்தார். செவிலியர் பயிற்சி மற்றும் இணை மருத்துவத்

துறைகளை வலுப்படுத்த, கொள்கை அவில் பல்வேறு முன் முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளதாகவும், **தேசிய செவிலியர் ஆணைய சட்டம்**, இணை மருத்துவ பணியாளர்களுக்கான **தேசிய ஆணைய சட்டம்** ஆகியன இதில் அடங்கும் என்று அவர் மேலும் கூறினார்.

*பட்டமளிப்பு -3(06)*

**ஜிப்மர் செவிலியர் பயிற்சி கல்லூரியின்** பட்டமளிப்பு விழாவில், புதுச்சேரி அரசின் தலைமைச் செயலர் திரு. சரத் சௌஹான், ஜிப்மர் இயக்குநர் டாக்டர் **வீர்சிங் நேகி**, பொறுப்புத் தலைவர் திரு. **நிதின் நகார்கர்** உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். செவிலியர் பயிற்சி மற்றும் பல்வேறு இணை மருத்துவத் துறைகளில் படிப்பு முடித்த 320 மாணவர்களுக்கு, இவ்விழாவின்போது பட்டங்கள் வழங்கப்பட்டன.

*சென்டாக் (11)*

புதுச்சேரியில், நீட் அல்லாத தொழில்முறைப் படிப்புகள், இளநிலை கலை—அறிவியல் படிப்புகள், மற்றும் நுண்கலை படிப்புகளில் மொத்தம் 10 ஆயிரத்து 810 இடங்களுக்கான மாணவர் சேர்க்கை நடைமுறைகள் இன்று முதல் தொடங்கியுள்ளன. இன்று மாலை 4 மணி முதல் வரும் 29ஆம் தேதி மாலை 5 மணி வரை சென்டாக் இணையதளம் மூலம் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாணவர் சேர்க்கைக்கான சென்டாக் விளக்க குறிப்பேட்டை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று வெளியிட்டார். வளர்ச்சித் துறை ஆணையர் திரு. கிருஷ்ணமோகன் உப்பு, கல்வித்துறைச் செயலர் திரு. முகமது ஹாசன் அபீத் மற்றும் சென்டாக் அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*என்.ஐ.டி. காரைக்கால் (14)*

**காரைக்கால் என்ஐடி** உயர்கல்வி நிறுவனத்தில், இத்தாலியின் **பொலிடெக்னிகோ-டி-டொலினோ** தொழில்நுட்பக் கழகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, **IC3-DCM 2026** என்னும் சர்வதேச மாநாடு இன்று தொடங்கியுள்ளது. மத்திய அரசின் **அனுசந்தான்-தேசிய** அறக்கட்டளை அமைப்பின் நிதி ஆதரவுடன் கூடிய இந்த 3 நாள் மாநாட்டில், ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி உட்பட பல்வேறு நாடுகளில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வல்லுநர்கள் பங்கேற்றுள்ளனர். **கணினி வழி இயந்திரவியல்** மற்றும், **தரவுசார்** தொழில்நுட்பங்களில், உருவாகிவரும் அண்மைக்கால முன்னேற்றங்கள் குறித்து, 50க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளும், 70க்கும் மேற்பட்ட **ஆராய்ச்சி சுருக்கங்களும்** இம்மாநாட்டில சமர்ப்பிக்கப் படுகின்றன. மாநாட்டின் தொடக்க விழாவில், என்ஐடி இயக்குநர் டாக்டர் **மகரந்த் மாதவ் காங்ரேகர்** மற்றும் முக்கிய விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி ஆர்ப்பாட்டம் (06)*

புதுச்சேரி **லோக் நிவாசில்** நேற்று நடைபெற்ற புதிய அரசின் பதவியேற்பு விழாவில் **தமிழ்த்தாய் வாழ்த்து** இறுதியாக பாடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, **தமிழ் உரிமை இயக்கத்தினர்** இன்று, கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது. லோக் நிவாஸ் நோக்கி ஊர்வலமாக வந்த இவர்களை, போலீசார் பாதியிலேயே தடுத்து நிறுத்தி, கைது செய்தனர்.

*வானிலை (16)*

தெற்கு வங்கக் கடலின் சில பகுதிகள், அந்தமான் கடல் மற்றும் அந்தமான்-நிக்கோபார் தீவுப் பகுதிகளில், வரும் 16ஆம் தேதி வாக்கில், **தென்மேற்குப் பருவ மழை** தொடங்க கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நேற்று வங்கக் கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, இன்றும் அதே பகுதியில் நீடிக்கிறது. ஆழ்ந்த

காற்றழுத்த தாழ்வுப் பகுதியில் இருந்து, தெற்கு மத்திய மகாராஷ்டிரா வரை, வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதையும் நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்கள் மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், வரும் 20ஆம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. இன்று கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நாகை, மயிலாடுதுறை, திருவாரூர், தேனீ மாவட்டங்கள், மற்றும் காரைக்கால் பகுதிகளில்  ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள வங்கக் கடல் பகுதிகள், தமிழகத்தின் கடலோரப் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*ஐபிஎல் (04)*

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு தர்மஸ்தலாவில் நடைபெறும் போட்டியில், பஞ்சாப்—மும்பை அணிகள் மோதவுள்ளன. நேற்று ராய்பூரில் நடைபெற்ற போட்டியில், பெங்களூரு அணி, 6 விக்கெட் வித்தியாசத்தில், கொல்கத்தா அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*பணவீக்கம் (08)*

மொத்த விலைகளின் அடிப்படையிலான பண வீக்கம் கடந்த ஏப்ரல் மாதத்தில் 8.3 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இது கடந்த 42 மாதங்களில், மிக அதிக அளவாகும், இவ்வாண்டு மார்ச் மாதத்தில் மொத்த விலை பணவீக்கம், 3.88 சதவிகிதமாக இருந்தது. கனிம எண்ணெய்கள், கச்சா எண்ணெய், அடிப்படை உலோகங்கள், உற்பத்திப் பொருட்கள் மற்றும், உணவு அல்லாத சில பொருட்களின் விலை அதிகரித்ததே, கடந்த மாதம், பணவீக்கம் அதிகரிக்க காரணம் என்று அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில் தெரியவந்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

அமைதியும் பாதுகாப்புமே, உலக ஒழுங்கிற்கு அடிப்படை என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர், குறைந்த காலத்திலேயே நாட்டு மக்களிடம் முழு நம்பிக்கை பெற்றுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா பாராட்டியுள்ளார்.

நாட்டின் தேசிய இலக்குகளை எட்டுவதில் சுகாதாரத் துறையினர் ஒவ்வொருவருக்கும் முக்கியப் பங்கு இருப்பதாக, மத்திய சுகாதாரத் துறைச் செயலர் வலியுறுத்தியுள்ளார்.

தென்மேற்குப் பருவ மழை, வரும் 16ஆம் தேதி வாக்கில் தொடங்க கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/SM/VM